https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

30th JUNE 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 86





# நாமல் அணியை வளைத்துப் போடுவதற்கு ஜனாதிபதி வியூகம்

## - இந்த வாரம் விசேட சந்திப்பு -

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு மறுத்து வரும் மொட்டு கட்சியின் நாமல் ராஜபக்ஸ ஆதரவு அணியை தம் பக்கம் வளைத்துப் போடுவதற்கு ஜனாதிபதி தரப்பு வியூகம் வகுத்துள்ளதாக ஜனாதிபதி வட்டாரம் தெரிவித்துள்ளது. 02

# மொட்டு எம்பிக்கள்

## 12 பேர் சஜித்துடன்



மொட்டு கட்சி எம்பிக்கள் 12 பேர் ஓரிரு நாட்களில் சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையிலான கூட்டணியில் இணையவுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொது செயலாளர் ரஞ்ஜித் மதுமபண்டார கூறியுள்ளார்.

இந்தக் கூட்டணியின் யாப்புக்கு 02

# சஜித்தின் 25 பேரை 15ஆம் திகதிக்கு முன் இணையுங்கள்

ஜனாதிபதியுடன் இணையவுள்ளதாகக் கூறப்படும் ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் 25 போரையும் ஜீலை மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு மொட்டு கட்சி ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

மொட்டு கட்சியின் வேட்பாளராக வருவதற்கு அதிகமானவர்கள் போட்டி போடுகின்றனர். அதற்கான பேச்சுக்கள் இப்போதும் இடம்பெற்று வருகின்றன என்று மொட்டு கட்சி வட்டாரம் கூறுகிறது.

மொட்டு கட்சியின் கீழ் மட்டம் மொட்டு கட்சி தனி வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்று கட்சிக்கு அழுத்தம் 02

ஹரே கிருஷ்ணா

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

புது ஆலயத்திற்கான வர்ணபூச்சு வேலைகளும் மற்றும் முடிவு வேலைகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன





ராதா கிருஷ்ணா



சீதா ராம்



ஸ்ரீ பாலாஜி



நரசிம்மர்

உயரமான கோபுரம் தசவதார மூர்த்திகள், பளிங்கு தரைகள் மற்றும் கண்கவர் வேலைபாடுகள்.



வர்ணபூச்சுக்கான மதிப்பீடு
ரூபா.5,000,000/= (5 மில்லியன்)
அன்பான பக்தர்களே நீங்களும் இச்சேவையில் பங்கு பற்றி விரைவில் கும்பாபிஷேகம் செய்து பகவானின் அருளை பெறுவோமாக.

Bank Detials

Commercial Bank
Bank Branch - Kotahena Branch
Account Name - ISKCON -TEMPLE FUND
Account No. - 1120017042
Swift Code - CCEYLKLX

Hatton National Bank
Bank Branch - Jempettah Street
Account Name - ISKCON
Account No. - 207010000891
Swift Code - HBLILKLX

சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்
ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ.ச. பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
+94 772288166 +94 112433325
188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு- 13
E-Mail: info@iskconsrilanka.org Web: www.iskcon.lk
ISKCON SRI LANKA

புதுசுடர்
www.puthusudar.lk
2024 JUNE 30 - SUNDAY

# ஜனாதிபதியின் வங்குரோத்து நிலை

ஜனாதிபதி தேர்தல் நெருங்க நெருங்க அரச தரப்புக்கு ஒரு வகையான படபடப்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எல்லாமே தேர்தல் தோல்வி பயம்தான்.

அரச தரப்பு ஆய்வு செய்தாலும் சரி,வேறு தரப்புகள் ஆய்வு செய்தாலும் சரி.எதிர்கட்சிகள்தான் முன்னிலையில் உள்ளன.இதனால் குழப்பமடைந்துள்ள அரசு இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி எப்படியாவது தேர்தலை வென்றுவிட வேண்டும் என்று துடியாய்த் துடிக்கிறது.

ஒருபுறம் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு நடடிக்கை எடுக்கிறது.இன்னொருபுறம் ஐந்து வருடமாகவுள்ள ஜனாதிபதி பதவி காலத்தை 6 வருடங்களாக நீடிப்பதற்கு முயற்சி செய்கிறது. மேலும்,சர்வஜன வாக்கெடுப்பு அது,இது என்றெல்லாம் கூறுவதை அவதானிக்கலாம்.

இவை எதுவுமே எடுபடாது என்று புரிந்துகொண்ட ஜனாதிபதி எப்படியாவது தேர்தலை நடத்தி அதில் வெற்றிபெற வேண்டும் என்ற முயற்சியில் இறங்கியுள்ளார்.

கூட்டணி அமைத்தல்,ஏனைய கட்சி எம்பிக்களுக்கு வலைவீசுதல்,மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளிவீசுதல் மற்றும் கூட்டங்களை நடத்துதல் என அரசின் தேர்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அதில் புதிதாக இணைந்துள்ள விவகாரம்தான் சர்வதேச கடன் மறுசீரமைப்பு விவகாரம்.அதை தூக்கிப் பிடித்து-அதனால் நாடு எல்லா பிரச்சினையிலும் இருந்து விடுபட்டுள்ளதுபோல் காட்டி பிரசாரம் செய்து வருகிறது அரச தரப்பு.

அதிலும் நகைச்சுவையான விடயம் என்னவென்றால் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுள்ளது என்று அறிவித்தமைதான்.

ரணிலை மக்கள் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் முற்றாக நிராகரித்துவிட்டார்கள்.கோத்தா ஜனாதிபதி பதவியை விட்டு ஓடியதும் அந்த இடத்தை நிரப்புவதற்கு வேறு எவரும் மொட்டு கட்சிக்கு கிடைக்காததால் ரணிலை அவர்கள் ஜனாதிபதியாக்கினர்.

அன்றைய சூழலில் மக்களிடமிருந்து ராஜபக்ச குடும்பம்-மொட்டு கட்சி பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியது.அந்த ஆபத்தில் இருந்து இவர்களை காப்பாற்றுவதற்கு ரணில்தான் பொருத்தமானவர் என்று ராஜபக்ச குடும்பம் அடையாளம் கண்டதால் ரணிலை ஜனாதிபதியாக்கினர்.

எந்த நோக்கத்துக்காக ரணில் நியமிக்கப்பட்டாரோ அந்த நோக்கத்தை சரியாக நிறைவேற்றியுள்ளார்.ராஜபக்ச குடும்பத்தின் பாதுகாப்பு முற்றாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ரணில் ஜனாதிபதியாகி மின் வெட்டையும் எரிபொருள் வரிசையையும் நீக்கியுள்ளார். ஆனால்,பொருளாதார பிரச்சினை கூடியுள்ளது.

அவர் வந்த பின்தான் மின் கட்டணம் உட்பட பல கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன்ன.புது புது வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.விலைவாசி அதிகரித்தது..

ஆனால்,பொருளாதாரத்தை சரி செய்துவிட்டோம் என்று அரசு கூறித் திரிகிறது.ஆனால்,அடிமட்டத்தில் நிலைமை வேறு.மக்களுக்கு தொடர்ந்து பிரச்சினைதான்.

வறுமை குறையவில்லைபொருட்களின் விலைகள் குறையவில்லைமின் கட்டணம் குறையவில்லைஎரிபொருட்களின் விலைகள் குறையவில்லை வரிகள் குறையவில்லை.வேலை வாய்ப்புக்கள் இல்லை.

ரணில் ஜனாதிபதியானதும் நடந்த கொடுமைகள் இவை.இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் அப்படியே வைத்துக்கொண்டு நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுள்ளது என்று கூறுவது நகைச்சுவையிலும் நகைச்சுவை.

இந்தக் கூற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு இருக்கும் மக்கள் கோபமடைகிறார்கள்.மக்களை ஜனாதிபதி இப்படி ஏமாற்றுகிறாரே என்று கூறுகிறார்கள்.

இதெல்லாம் தேர்தல் கூத்துக்கள் என்பதை விளங்கிக்கொண்ட மக்கள் இந்தக் கூத்துக்களுக்கு இடம் கொடுக்கமாட்டார்கள் என்பது நிச்சயம்.

உண்மையில்,அரசியல்ரீதியாக வங்குரோத்து நிலை அடைந்திருப்பது இந்த ஜனாதிபதிதான் என்று தெளிவாகத் தெரிகிறது.

## நாமல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**இந்த அணியுடன் இந்த வாரம் விசேட பேச்சுவார்த்தை ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என்று அந்த வட்டாரம் மேலும் தெரிவிக்கிறது.**

**ஜனாதிபதியின் கொள்கையுடன் ஒத்துப்போக முடியாது என்று நாமல் தரப்பு மொட்டு அணி மறுப்பதால் அவர்களுடன் பொது இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என்று அறிய முடிகிறது.**

**இந்த அணியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாட்டை ஜனாதிபதியுடன் சேர்ந்து இயங்கும் மொட்டு கட்சி அமைச்சர்கள் பலர் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.**

**அமைச்சுப் பதவிகள் வகித்து வரும் மொட்டு எம்பிக்கள் அனைவரும் ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு வழங்கி வருகின்றனர்.ரணிலையே மொட்டின் அல்லது பொது வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று கூறி வருகின்றனர்.**

**அமைச்சுப் பதவிகள் இன்றி மொட்டு கட்சியுடனேயே இருக்கும் மொட்டு எம்பிக்கள் நாமல் ராஜபக்சவுக்கே ஆதரவு வழங்கி வருகின்றனர். குறிப்பாக,இளம் எம்பிக்கள்.**

**ஆனால், பசில் ராஜபக்ச உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் ரணிலுக்கே ஆதரவு வழங்கி வருகின்றனர்.**

## சஜித்தின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கொடுத்து வருவதாகும் அத்தகவல் மேலும் கூறுகிறது.

இந்த நிலையில்தான், ஜனாதிபதியுடன் இணையவுள்ளார்கள் என்று கூறப்படும் சஜித் தரப்பு எம்பிக்களை மிக விரைவாக இணைத்துக்கொள்ளுமாறு மொட்டு ஜனாதிபதியிடம் கூறியுள்ளது.

## மொட்டு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைவாக அவர்களுக்கு பதவிகள் வழங்கப்படும் என்று கூறிய செயலாளர் தமிழ்-முஸ்லிம் கட்சிகளில் இருந்து 30 எம்பிக்கள் இந்தக் கூட்டணியில் இணையவுள்ளனர் என்றார்.

இந்தக் கூட்டணி கட்சிகள் அனைத்தும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசாவின் வெற்றிக்காக உழைக்கும் என்றும் அரசின் பிரசாரங்கள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்திக்கு இதுவரை 20 லட்சத்துக்கும் அதிகமான புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அடுத்த மாதம் புதிய கூட்டணி ஆரம்பிக்கப்படும் என்றும் ரஞ்சித் மதுமபண்டார கூறினார்.






# பதவிக்கான பாய்ச்சல்

மக்கள் சேவைக்காகத்தான் அரசியல் என்ற கதையெல்லாம் அரசியலுக்குள் நுழைவதற்கான போலிக் காரணமாகும்.பணம் உழைத்தல் என்பதுதான் அரசியல்.

99 வீதமான அரசியல்வாதிகள் அப்படியானவர்கள்தான். அரசியலுக்குள் நுழைந்து மிக விரைவிலேயே அவர்களின் சொத்துக்கள் பெருகுவதைக் காணலாம்.

அதிகாரம்-சலுகைகளுக்கு பின்னால் ஓடுகின்ற அரசியல்வாதிகள்தான் அதிகம். துறைதான்.அவ்வாறு பணம் சம்பாதிக்கும் மனோநிலையில் அரசியலுக்குள் வருபவர்களால் எதிர்க்கட்சியில் அமர முடியாது. அரசுடன் இணைய வேண்டும். எந்த தரப்பு ஆட்சியில் இருக்கிறதோ அந்தத் தரப்புடன் சேர வேண்டும். அமைச்சுப் பதவிகளை பெற வேண்டும்.பணம் சம்பாதித்தல் என்ற அவர்களின் இலக்கை அடைய வேண்டும்.

இப்போதும் அதுதான் நடக்கிறது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பலர் ஜனாதிபதியானதும் முதலில் ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் அவருடன் போய் இணைந்துண்டு அமைச்சுப் பதவிகளை பெற்றனர்.

அவர்களின் முயற்சியாலேயே மேலும் சிலரை அந்த அரசில் இணைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ராஜித சேனாரத்ன அவர்களில் ஒருவர்.அவர் வெளிப்படையாகவே அரசுக்கு ஆதரவாகப் பேசி வருகிறார். ஆனால்,அவர் விரும்புகின்ற அமைச்சு கிடைத்தால் மாத்திரம்தான் இணையவுள்ளனர்.

இப்படி அமைச்சுப் பதவியை நோக்கியதாகவே இவர்களின் அரசியல் பயணம் அமைந்துள்ளது.இந்த அரசு அடுத்த முறை ஆட்சிக்கு வருமா இல்லையா என்றெல்லாம் தெரியாது.

இருக்கின்ற காலத்துக்குள் எவ்வளவு சுருட்ட முடியுமோ அவ்வளவு சுருட்டுதல்.ஆட்சி மாறினால் மீண்டும் அந்த அரசுடன் போய் ஒட்டுதல். அமைச்சுப் பதவிகளை எடுத்தல்.

இப்படியான மனோநிலையில் அதிகமான அரசியல்வாதிகள் மக்கள் முதலில் அடையாளம் காண வேண்டும்.அவர்களை அரசியலில் இருந்து ஒதுக்குவதற்கான வேலையை முதலில் செய்ய வேண்டும்.

தற்போது மக்கள் அனுபவித்து வரும் பொருளாதார பிரச்சினைகளுக்கு காரணம் மக்கள் சரியான-ஊழல் மோசடியற்ற அரசியல்வாதிகளை தெரிவு செய்யாமையே.பட்டது போதும்.இனியாவது மக்கள் திருந்த வேண்டும்.இல்லாவிட்டால் காலம் பூராகவும் இப்படியே காஷ்டப்பட வேண்டியதுதான்.

மக்கள் சேவை அவர்களுக்கு இரண்டாம் பட்சம்தான். ஆனால்,வாக்கு சேகரிப்பதோ மக்களுக்கு சேவை செய்வோம் என்று கூறித்தான்.

அவர்களின் இலக்கு கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்க வேண்டும்.சொத்துக்கள் சேர்க்க வேண்டும்.பெரிய வர்த்தகத்தில் ஈடுபட வேண்டும்.

அரசியல் என்பதே பணம் சம்பாதிக்கும் ஒரு வர்த்தகத் அரசுடன் இணைவதற்கான முயற்சியில் நீண்ட நாட்களாக ஈடுபட்டு வருகின்றமை எல்லோரும் அறிந்த விடயம்.

ஜனாதிபதி தேர்தல் நெருங்குவதால் அடுத்த வாரமளவில் அந்த இணைவு இடம்பெறும் என்றும் இணைபவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்ரமசிங்க அரசுடன் இணைதல் என்ற நிலைப்பாட்டில் உள்ளார்.


அவர் எதிர்பார்ப்பது சுகாதார அமைச்சை.கடந்த நல்லாட்சியிலும் அவர் வகித்தது அதே அமைச்சைத்தான்.இப்போதுதான் எதிர்பார்க்கிறார். அதற்காகவே காத்து கிடக்கிறார்.

ஆக, அமைச்சுக்காகத்தான் இணையப் போகிறார் என்பது நிரூபணம்.ஏனையவர்களும் இதன் நோக்கத்துக்காகவேதான் அலைந்து திரிவதுதான் இப்போதைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்.

இவர்கள் உரிய நேரத்தில் செய்ய வேண்டியதை செய்திருந்தால்-அவர்களின் கடமையை சரியாக நிறைவேற்றி இருந்தால் நாடு இந்த நிலைக்குச் சென்றிருக்காது. அவர்களின் பைகளை நிரப்ப முயற்சித்தமைதான் எல்லா பிரச்சினைக்கும் கரணம்.

இவ்வாறான அரசியல்வாதிகளை

**அரசியல் என்பதே பணம் சம்பாதிக்கும் ஒரு வர்த்தகத் துறைதான். அவ்வாறு பணம் சம்பாதிக்கும் மனோநிலையில் அரசியலுக்குள் வருபவர்களால் எதிர்க்கட்சியில் அமர முடியாது. அரசுடன் இணைய வேண்டும். எந்த தரப்பு ஆட்சியில் இருக்கிறதோ அந்தத் தரப்புடன் சேர வேண்டும். அமைச்சுப் பதவிகளை பெற வேண்டும். பணம் சம்பாதித்தல் என்ற அவர்களின் இலக்கை அடைய வேண்டும்.**



# சஜித் முதலாமிடம் ...
# அனுர இரண்டாமிடம்...
# ரணில் மூன்றாமிடம்...

**கேள்வி : நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளாரே ?**
**கேள்வி : சரத் பொன்சேகா உங்களது கட்சியுடன் முரண்பட்டுக்கொண்டு நிற்பது ஏன்?**
**கேள்வி : மக்கள் மத்தியில் இப்போது முன்னணியில் இருப்பது எந்த வேட்பாளர்?**
**கேள்வி : ,உங்கள் தலைவரை அனுர விவாதத்துக்கு அழைத்தால் வர மறுக்கிறாரே?**
**கேள்வி : உங்களது தாய் கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்கு மீண்டும் திரும்பும் திட்டம் ஏதும் உண்டா?**

– இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்பி அசோக அபயசிங்க.அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி: நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளாரே ?**

பதில் : ஜனாதிபதி தேர்தல் நெருங்குவதால் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறுவதற்கான வியூகம்தான் இது.நாடு பட்டினியில் கிடக்கிறது.மக்கள் வாழ முடியாமல் கஷ்டப்படுகிறார்கள்.

தொழில் இல்லை.கையில் பணமில்லை. பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது.எங்கு பார்த்தாலும் வறுமை.

2019 ஆம் ஆண்டு முடிவில் தனிநபர் கடன் 6.5 லட்சம் ரூபாவாகும்.இப்போது 15 லட்சம் ரூபாவாகும்.

நிலைமை இப்படி இருக்கும்போது எப்படி நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டுள்ளதாக சொல்ல முடியும்.?

தேர்தலுக்காக ஜனாதிபதி ஏதோவெல்லாம் பேசுகிறார்.வடக்கிற்கு போனால் ஒன்று பேசுகிறார்.தெற்கிற்கு சென்றால் வேறொன்று பேசுகிறார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் இலங்கையில் முதல் தடவையாக ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதி ஒருவர் மூன்றாம் அல்லது நாம் இடத்திற்கு தள்ளப்படப்போகிறார்.அவர் தோல்வியடைவது நிச்சயம்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு இருக்கின்ற வாக்குகள் 2.5 லட்சம்தான்.

அதேபோல், ஜேவிபியாலும் வெல்ல முடியாது.அவர்களின் வாக்கு வாங்கி 6.5 லட்சமாகும்.சஜித்துக்கு இருப்பது 55 லட்சத்தையும் தாண்டிய வாக்குகள்.

மொட்டு கட்சியாலும் வெல்ல முடியாது. அக்கட்சி 8 துண்டுகளாக பிரிந்துவிட்டது.

ரணிலால் வெல்ல முடியும் என்றால் ஏன் ரணில் ஜனாதிபதி பதவி காலத்தை இரண்டு வருடங்களுக்கு ஒத்திப்போடுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்?

ரணிலால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது.ரணில் பட்டப்பகலில் மத்திய வங்கியைக் கொள்ளையடித்தார்.அவருக்கு வாக்களிக்க வேண்டாம் என்று மொட்டு கட்சி 2019 ஜனாதிபதி தேர்தலில் கூறியது.

அதேபோல் மஹிந்தவை திருடன் என்று ஐக்கிய தேசிய கட்சி கூறி வந்தது.

அந்த இரண்டு தரப்பும் இப்போது ஒன்றிணைந்து நிற்கிறது.இவர்களால் எப்படி நாட்டை முன்னேற்ற முடியும்?

அரச எம்பிக்களின் எண்ணிக்கை 103ஆகக் குறைந்துள்ளது.அரசின் இருந்து விலகப்போகிறவர்களுக்கு ஜனாதிபதி சலுகைகளைக் குடுத்து நிறுத்துகிறார்.அதேபோல்,ஏனைய கட்சி எம்பிக்களுக்கும் வலை வீசுகிறார்.

**கேள்வி : சரத் பொன்சேகா உங்களது கட்சியுடன் முரண்பட்டுக்கொண்டு நிற்பது ஏன்?**

பதில்: முதலில் அவரை கட்சியின் தவிசாளராக பிரேரித்தது சஜித் பிரேமதாஸ ாதான்.அவர் எமது கட்சியின் மூன்றாம் நிலையில் உள்ளார்.

அவர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எமது கட்சியில் ஜனாதிபதி வேட்பாளராக நிற்பதற்கு விரும்புகிறார்.எமது கட்சியோ சஜித் பிரேமதாசாவை நிறுத்துவதற்கு முடிவெடுத்துவிட்டது.இதனால்தான் அவர் எம்முடன் பிரச்சினைப்படத் தொடங்கினார்.

இருந்தாலும்,அவரை நாம் கட்சியில் இருந்து நீக்கவில்லை.அவரும் விலகவில்லை.அவர் எதிர்காலத்தில் ரணிலுடன் இணைவாரோ தெரியாது.

**கேள்வி : மக்கள் மத்தியில் இப்போது முன்னணியில் இருப்பது எந்த வேட்பாளர்?**

பதில் : முதலாமிடத்தில் சஜித் உள்ளார்.அனுர இரண்டாமிடத்தில் உளளார்.மூன்றாமிடத்தில் ரணில்.மொட்டு கட்சி தனியாக வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் அக்கட்சி இரண்டாமிடத்துக்கு வரும் என்று நான் நம்புகிறேன்.

இப்போது இருக்கின்ற வேட்பாளர்களில் ஊழல் ,மோசடியற்ற வேட்பாளரும் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டே சேவை செய்ய முடியும் என்று நிரூபித்துக் காட்டிய வேட்பாளரும் சஜித் பிரேமதாஸாதான்.

ஜேவிபி 1965 இல் கட்சியை உருவாக்கி 71 இல் நாட்டில் ஆயுதப் போராட்டத்தை ஏற்படுத்தி நாட்டை அழித்தார்கள்.1982இல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார்கள்..

மீண்டும் 1989இல் ஆயுதப் போராட்டத்தை தொடக்கி நாட்டை நாசமாக்கினார்கள்.மக்களை கொலை செய்தார்கள்.பொருளாதாரத்தைக் கொலை செய்தார்கள்.மீண்டும் தேர்தல் கேட்கிறார்கள்.

அதேபோல்,ராஜபக்ச குடும்பம் பொருளாதார கொலை செய்தவர்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அவர்களுடன் கைகோத்துள்ளார் ரணில்.

ஆனால்,நாம் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டே நாட்டுக்கு சேவை செய்து வருகிறோம்.வைத்தியசாலைகளுக்கு மருந்து பொருட்கள் வழங்கி வருகிறோம். பாடசாலைகளுக்கு பஸ்கள் வழங்கி வருகிறோம்.

பிரபஞ்சம் என்ற வேலைத் திட்டம் ஊடாக பாடசாலைகளுக்கு தகவல் தொழில்நுட்ப வசதிகளை வழங்கி வருகிறோம்.சஜித் ஊழல்,மோசடிக்கு எதிரான தலைவர்.

**கேள்வி : இருந்தாலும்,உங்கள் தலைவரை விவாதத்துக்கு அழைத்தால் வர மறுக்கிறாரே?**

பதில் : ஜேவிபியை முதலில் விவாதத்துக்கு அழைத்தது நாம்தான்.எமது பொருளாதார குழுவுடன் விவாதத்துக்கு வருமாறு கூறினோம்.ஆனால்,அவர்கள் தலைவரோடுதான் விவாதம் நடத்த வேண்டும் என்று கூறினார்கள்.

அதற்கு சஜித்தும் தயார் என்று கூறினார். ஆனால்,பொருளாதார குழுவிடம் சொல்லித்தான் செய்ய வேண்டும் என்று கூறினார்.பொருளாதார குழுதான் முதலில் விவாதத்துக்கு அழைத்தது.

இதுபற்றி பேசுவதற்காக நாம் நலின் பண்டாரவை பெயரிட்டோம்.அவர்கள் நலிந்த ஜயதிஸ்ஸவை பெயரிட்டனர். விவாதத்துக்கான திகதிபற்றி பேசுவதற்காக நாடாளுமன்றத்துக்கு வருமாறு நாம் ஜயதிஸ்ஸவுக்கு கடிதம் அனுப்பினோம். வரவில்லை.

அப்படியே வரமால் இருந்துவிட்டு தலைவர்கள் இருவருக்குமிடையிலான விவாதத்தை நடத்துவதற்கு மே 20ஆம் திகதியை அவர்கள் ஒருதலைப்பட்சமாக தெரிவு செய்தனர்.

ஆனால், மே இறுதி வாரத்தில் பொருளாதார குழுவுடனான விவாதத்துக்கும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் ஏதாவது ஒரு திகதியில் தலைவர்களுக்கிடையிலான விவாதத்துக்கும் திகதி கொடுத்தோம்.

அவர்கள் அரச தொலைகாட்சி ஒன்றில் 6ஆம் திகதி விவாதம் நடத்துவதற்கு தயாராகி அறிவித்தனர்.நாம் அதற்குத் தயாரில்லை என்று அறிவித்தோம்.

எல்லா தொலைக்காட்சிகளும் அழைத்து பொது இடத்தில் விவாதம் நடத்தி ஒரே நேரத்தில் எல்லா தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்புவதே எமது திட்டம்.

முதலில் பொருளாதார குழுவுடன் விவாதம் நடத்தி அதன் பின் தலைவர்களுக்கிடையிலான விவாதத்தை நடத்துவதே எமது விருப்பம்.

**கேள்வி : உங்களது தாய் கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்கு மீண்டும் திரும்பும் திட்டம் ஏதும் உண்டா?**

பதில் : அப்படியான திட்டம் எதுவும் இல்லை.எமது கட்சியில் இருந்து அதிகமானவர்கள் அந்தப் பக்கம் செல்வார்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள்.அப்படி எதுவும் கிடையாது. ஓரிருவர் மாத்திரம் செல்லக்கூடும்.அது அவர்களின் சுயநலத்திற்காக.

ரணிலால் வெல்ல முடியாது.அவரிடம் போய் என்ன செய்வது ? ஐக்கிய தேசிய கட்சியின் 90 வீதமானவர்கள் எம்முடனேயே உள்ளனர்.அப்படி இருக்கும்போது எதற்கு நாம் அங்கே செல்ல வேண்டும்.

விரும்பினால் ஐக்கிய தேசிய கட்சியினர் எம்முடன் இணையட்டும்.இல்லாவிட்டால் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்தை சஜித்திடம் தர வேண்டும்.அப்படி தந்தால் எல்லோரும் ஒன்றாக இருக்க முடியும்..–என்றார்.



**விரும்பினால் ஐக்கிய தேசிய கட்சியினர் எம்முடன் இணையட்டும். இல்லா விட்டால் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத் துவத்தை சஜித்திடம் தர வேண் டும். அப்படி தந்தால் எல் லோரும் ஒன்றாக இருக்க முடியும்..**




# டிஜிட்டல் சந்தைப்படுத்தல் நிகழ்வு

அனைவரும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த DMASL Digital Summit 2024 நிகழ்வு, பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜில் 2024 ஜூலை 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் பிரமாண்டமாக இடம்பெறவுள்ளதுடன், இலங்கையின் டிஜிட்டல் சந்தைப் பரப்பில் பெரும் கவனத்தை ஈர்க்கவுள்ளது.

கடந்த ஆண்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட இந்நிகழ்வு மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்றிருந்த நிலையில், டிஜிட்டல் சந்தைப்படுத்தல் துறையில் ஒரு முன்னணி நிகழ்வாக விரைவாக வளர்ச்சிகண்டு, இந்த ஆண்டு உச்சி மாநாடானது கடந்த ஆண்டை விடவும் வலுவானதாகவும், ஈடுபாடுகளை வளர்ப்பதாகவும் அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்முறை இரு தினங்களுக்கு இந்நிகழ்வு நீட்டிக்கப்பட்டுள்ளதுடன், தொழிற்துறையில் இதன் முக்கியத்துவம் மற்றும் ஈடுபாட்டின் அதிகரிப்பை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

அறிவூட்டல், தொடர்புகளை வளர்த்தல் மற்றும் இதற்காக வாதிடுதல் மூலமாக இலங்கையில் டிஜிட்டல் துறையின் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்துள்ள முன்னணி தொழில்சார் அமைப்பான இலங்கை டிஜிட்டல் சந்தைப்படுத்துபவர்கள் சங்கத்தால் (Digital Marketers Association of Sri Lanka - DMASL) ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒரு நிகழ்வாக DMASL Digital Summit 2024 இடம்பெறுகின்றது.




# இரத்தினக்கல் கண்காட்சியின் தங்க அனுசரணையாளராக SLGJA

இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிற்துறையின் உச்ச அமைப்பான இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA), இரத்தினபுரி சர்வதேச இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண கண்காட்சிக்கு அனுசரணை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறது.

இரத்தினக்கல் அகழ்வோர் மற்றும் வர்த்தகர்கள் சங்கம் மற்றும் இரத்தினபுரியில் காணப்படும் ஏனைய இரத்தினக்கல் தொடர்பான சங்கங்களுடன் இணைந்து, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை (NGJA) இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது.

SLGJA இதற்கு தங்க அனுசரணையாளராக வழங்கும் ஆதரவானது, இத்தொழில்துறைக்கான சங்கத்தின் ஆதரவையும் அதன் உறுப்பினர்களின் வளர்ச்சியையும் ஊக்குவிக்க அது கொண்டுள்ள முயற்சிகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

இரத்தினபுரி கண்காட்சி அறிவிப்பு தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் SLGJA இனால் தங்க அனுசரணை தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்பட்டது. இந்நிகழ்வின் அதிதிகளாக கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சாந்த வீரசிங்க, பேதுயு தலைவர் விராஜ் டி சில்வா, பேதுயு இன் பணிப்பாளர் நாயகம் ஜனக உதய குமார, SLGJA தலைவர் அஜ்வார்ட் டீன், SLGJA இன் முன்னாள் தலைவர் A.H.M. இம்திசாம், ஞடுபுதுயு இன் துணைத் தலைவர் பிராஸ் ஹமீட், FACETS Sri Lanka தலைவரும் வெளிநாட்டு ஊக்குவிப்பு பிரதித் தலைவருமான அர்மில் சமூன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கண்கவர் Pixel Bloom அனுபவம்




கொழும்பு தாமரை கோபுரமானது (CLT) தெற்காசியாவின் முதலாவது அதிவேக மற்றும் ஊடாடல் டிஜிட்டல் கலை அரங்கை இலங்கையில் உருவாக்கி, அத்திட்டத்திற்கான சரியான பங்காளிகளை தேடியது.

அதன் பின்னரான விரிவான ஆய்விற்குப் பின்னர், அவர்கள் Bling Productions மற்றும் Eyeon நிறுவனங்களை தேர்ந்தெடுத்தனர். Bling Productions மற்றும் Eyeon இன் Marlon Jesudason மற்றும் Obed Kushan இருவரும் உள்ளூர் டிஜிட்டல் கலைத் துறை, தாமரைக் கோபுரத்தின் தூரநோக்கு மற்றும் பார்வையாளர்களின் புள்ளிவிபரங்கள் ஆகியவற்றை ஆழ்ந்து ஆராய்ந்து, அதிநவீன projection mapping தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு விரிவான திட்டத்தை உருவாக்கினர்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள திறமையான இலங்கையர்களை உள்ளடக்கிய Pixel Bloom இனை உருவாக்கவான வேலைகள் 14 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன.

Bling Productions நிறுவனத்தின் Marlon Jesudason மற்றும் Eyeon நிறுவனத்தின் Obed Kushan ஆகிய இருவரும், இலங்கை கலைஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஊக்கமளிப்பதற்கும் வலுவூட்டுவதற்குமாக இத்திட்டத்தின் தேவைகளை திட்டமிட்டு, அதன் ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கு தலைமை தாங்கினர்.

# Grundfos இன் உத்தியோகபூர்வ சேவை பங்காளியாக Hayleys Aventura



உலகப் புகழ்பெற்ற டென்மார்க் நீர்ப் பம்பி உற்பத்தியாளரான புசரனெகழள இன், இலங்கையின் உத்தியோகபூர்வ சேவை பங்காளியாக (SP) Hayleys Aventura இணைந்துள்ளது.

இந்த சேவை பங்காளித்துவமானது, Hayleys Aventura நிறுவனம் தனித்துவமான அதன் மென்பொருள் கட்டமைப்புகளின் ஒருங்கிணைப்பு, விரிவான உதிரிப் பாகங்களின் கையிருப்பு மற்றும் பல்வேறு தொழில்நுட்ப தகவல்களை அணுகுவதற்கான வசதியின் மூலம் Grundfos தயாரிப்புகளின் அனைத்து உற்பத்திகளுக்குமான, விற்பனைக்குப் பின்னரான பராமரிப்பு மற்றும் நிபுணத்துவத்தை வழங்குவதற்கான தனித்துவமான வசதியை ஏற்படுத்துகிறது.

வாடிக்கையாளர் தேவைகளை சிறப்பாக பூர்த்தி செய்வதற்கும், இலங்கையில் புசரனெகழள தயாரிப்புகளுக்கான சேவைகளை வழங்குவதில் நம்பகமான நிபுணர்கள் எனும் தமது நிலையை உறுதிப்படுத்துவதற்கும் Hayleys Aventura நிறுவனத்தின் பணியாளர்கள், Grundfos நிறுவனத்தால் வழங்கப்படும் திறன்களை மேம்படுத்தும் பிரத்தியேகமான நிகழ்ச்சிகள் மூலம், உரிய அறிவு மற்றும் திறன்களால் வலுவூட்டப்பட்டுள்ளனர்.

2014 இல் ஆரம்பமான இந்தக் கூட்டாண்மையானது, தற்போது விற்பனைக்குப் பின்னரான சேவைகள் வலுவான வாடிக்கையாளர் மதிப்பை ஏற்படுத்துவதற்கான Hayleys Aventura நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றுகிறது.

# பிரத்தியேக ரி20 உலகக் கோப்பை டிவி ஒப்பந்தங்களை அறிமுகப்படுத்தும் Samsung




இலத்திரனியல் துறையில் உலகளாவிய முன்னணி நிறுவனமான Samsung Sri Lanka, தனது பிரத்தியேக T20 உலகக் கோப்பை தொலைக்காட்சி ஒப்பந்தங்களை வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறது,

இது நாடு முழுவதும் உள்ள ரசிகர்களுக்கு இணையற்ற சேமிப்பு மற்றும் கிரிக்கெட் உற்சாகத்தை அளிக்கிறது. இலங்கையில் கிரிக்கெட் ரசிகர்களிடை கிரிக்கெட் போட்டி குறித்து பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ள நிலையில், ளுயஅளரபெ அதன் அதிநவீன தொலைக்காட்சிகள் மூலம் குடும்பங்கள் மற்றும் நண்பர்களுக்கு பார்க்கும் அனுபவத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், இப்போது எங்கேயும் இல்லாத வகையிலான விலையில் கிடைக்கிறது.

கிரிக்கெட் உணர்வைக் கொண்டாடும் வகையில், Samsung Sri Lanka பல்வேறு தொலைக்காட்சி வகைகளில், பல்வேறு தேர்வுகள் மற்றும் கையிலுள்ள பணத்திற்கேற்ப கவர்ச்சிகரமான சிறப்புச் சலுகைகளை வழங்குகிறது.

உயர்-தெளிவான Ultra HD Displayகள் வரை, Samsung TV வரிசை ஒவ்வொரு வீட்டிற்கும் மற்றும் கிரிக்கெட் ரசிகர்களுக்கும் சரியான பொருத்தம் இருப்பதை உறுதி செய்கிறது.

தயாரிப்பு வகைகளில் விலைகள் குறைக்கப்பட்டதால், குடும்பங்கள் இப்போது Samsungஇன் தொலைக்காட்சிகளுடன் கிரிக்கெட் போட்டிகளை முன்பை விட மலிவு விலையில் பார்த்து அனுபவிக்க முடியும்.

# ஐரோப்பிய கிண்ண தொடக்க விழாவை படம்பிடிக்கும் உத்தியோகபூர்வ ஸ்மார்ட்போனாக Vivo V30




UEFA ஐரோப்பிய கால்பந்து சம்பியன் ஷிப் 2024 (UEFA EURO 2024™) கால்பந்து தொடரானது, உலகம் முழுவதும் உள்ள ரசிகர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில், 2024 ஜூன் 14ஆம் திகதி ஜேர்மனியில் உள்ள மியூனிச் கால்பந்து அரங்கில் ஆரம்பமானது.

இதன் தொடக்க விழாவை படம்பிடிக்கும் உத்தியோகபூர்வ ஸ்மார்ட்போனாக vivo V30 விளங்கியது.

புதிய vivo V30 தொடரானது, புதிய Aura Light Portrait அம்சத்தின் மூலம் Portrait புகைப்படத்தின் தரத்தை மேலும் அதிகரிக்கும், அதே நேரத்தில் மிருதுவான செயற்றிறனையும், பிரகாசமான காட்சியையும் நீண்ட மின்கல ஆயுள் ஆகியவற்றையும் வழங்குகிறது.

மேம்படுத்தப்பட்ட அதன் பிரத்தியேகமான தொழில்நுட்ப அம்சமான soft light ஆனது, சூழல் வேறுபாடுகளின் அடிப்படையில் நிற மாற்றத்தை புத்திசாலித்தனமாக அளவீடு செய்வதோடு, தூரத்திற்கு ஏற்ப அதன் பிரகாசத்தை மாற்றியமைக்கிறது.

இந்த புத்தாக்க கண்டுபிடிப்பானது, சுற்றுப்புற சூழலுடன் நிற வேறுபாடுகளுக்கு ஏற்ப ஒத்திசைகிறது. சவாலான வெளிச்சம் காணப்படுகின்ற நிலைகளிலும் பிரம்மிக்க வைக்கும் portrait புகைப்படங்களை எடுப்பதை அது உறுதி செய்கிறது.

# ஹேலீஸ் சோலாரின் "கடன் இல்லாத ஒரு கடன்"




ஹேலிஸ் சோலார் நிறுவனம் அறிமுகப்படுத்தும் "கடன் இல்லாத ஒரு கடன்" Hayleys Fentons இன் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிரிவான ஹேலிஸ் சோலார், இலங்கை குடும்பங்களுக்கு "கடன் இல்லாத ஒரு கடன்" மூலம் அவர்களின் மின்சார தேவைகளைக் கட்டுப்படுத்த அதிகாரம் அளிக்கிறது.

சூரிய சக்தியை அனைவருக்கும் மலிவு விலையில் வழங்குவதற்காக, பிரத்தியேக நிதித் திட்டங்களின் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில், பல குடும்பங்களுக்கு மின் கட்டணம் ஒரு குறிப்பிடத்தக்க செலவாகிவிட்டது. சூரிய சக்திக்கு மாறுவது இந்தச் செலவை எளிதில் அகற்றும் ஒரு வழியாகும்.

நிதியளித்தல் ஒரு சவாலாகவே இருப்பதோடு, இறுதியில் குடும்பத்தின் மாதாந்த பட்ஜெட்டில் மற்றொரு சுமையை இலகுவாக சேர்த்தும் விடுகிறது. எனவே, "கடன் இல்லாத ஒரு கடன்" திட்டத்தின் ஊடாக, சூரிய முதலீடுகளுக்காக, ஹேலிஸ் சோலாருடன் இணைந்து பிரத்தியேக கட்டணங்களை வழங்கும் இலங்கையில் உள்ள உயர்மட்ட நிதி பங்காளிகளிடமிருந்து நுகர்வோர் நிதி வசதிகளை அணுக முடியும்.



# Neptune Recyclersஇன் நிலைபேறான கழிவு முகாமைத்துவத்திற்கான உலகளாவிய அங்கீகாரம்

அதிக சூழல் விழிப்புணர்வு அவசியமான இந்த சகாப்தத்தில், மிகவும் ஈர்க்கக்கூடிய வகையிலான 99.25% கழிவு மாற்றீட்டு விகிதத்துடன் தொழில்துறை முன்னணி அமைப்பாக Neptune Recyclers திகழ்கின்றது.

இந்தச் சாதனையானது நேிவரநெ சுநஉலஉடநசள அமைப்பை இலங்கையில் ஒரு சூழல் சேவையாளராக நிலைநிறுத்துவதோடு மட்டுமல்லாமல், Intertek யிடமிருந்து பெறுமதிமிக்க Zero Waste to Landfill (பூமிக்கு பூச்சிய கழிவு) சான்றிதழைப் பெற்ற உலகின் முதலாவதும் ஒரேயொரு கழிவு முகாமைத்துவ நிறுவனமாகவும் உள்ளது.

Intertek இன் சான்றழிப்பு திட்டமானது, Zero Waste to Landfill, Near Zero Waste to Landfill, Advanced Waste Diversion ஆகிய 3 வகைகளில் வழங்கப்படுகிறது.

Neptune Recyclers இனது சாதனையானது, மூன்று வருட சான்றழிப்பு காலத்தில் அதன் வலுவான கழிவு முகாமைத்துவ நடைமுறைகளுக்கான நீடித்த உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

இந்த முக்கிய சாதனைகளில், Intertek இன் Zero Waste to Landfill சான்றிதழை கொண்டிருக்கும் ஒரேயொரு கழிவு முகாமைத்துவ நிறுவனம் எனும் உலகளாவிய அங்கீகாரம் அடங்குகின்றது.

# செலான் வங்கிக்கு புதிய தலைவர்

செலான் வங்கி 29 மே 2024 முதல் அமுலுக்கு வரும் வகையில் அதன் நிர்வாக சபையின் புதிய தலைவராக நீதியரசர் புவனேக அலுவிஹாரே PCia நியமிப்பதாக அறிவித்துள்ளது.

தற்போதைய தலைவரான ரவி டயஸ், மே 28, 2024 அன்று வங்கியின் இயக்குநராக தனது ஒன்பது ஆண்டு பதவிக்காலத்தை நிறைவு செய்து ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் (பெருநிறுவன ஆட்சி) இணங்க இந்த பதவி மாற்றம் இடம்பெறுகிறது.

நீதியரசர் அலுவிஹாரே பெப்ரவரி 2024இல் செலான் வங்கியின் சுயாதீன, நிர்வாகமற்ற இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

நீதியரசர் அலுவிஹாரே சட்டம் மற்றும் நிதித் துறைகளில் நிறைந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றை தனது புதிய பதவிக்கு கொண்டு வருவதுடன் அவரது வாழ்நாள் முழுவதும் பல்வேறு மேன்மைதங்கிய பதவிகளை வகித்துள்ளார்.



அவர் பல தசாப்தங்களாக சட்டம் மற்றும் நீதித் துறைகளில் சேவை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 1982ஆம் ஆண்டு அரச சட்டத்தரணியாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து சேவையாற்றி 2013ஆம் ஆண்டு மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பதவிக்கு உயர்ந்தார்.




# 'The Gathering of Giants நிகழ்வு

The Gathering of Giants ஆசிய யானைகளின் ஒன்றுகூடல்) எனும் மிகச் சிறந்த அறிவூட்டல் வார இறுதி நிகழ்வை எதிர்வரும் 2024 ஓகஸ்ட் 09 முதல் 11 வரை Cinnamon Habarana Complex இல் அறிமுகப்படுத்தி ஆரம்பித்து வைக்கவுள்ளது.

"யானைகளின் ஒன்றுகூடல்" எனும் நிகழ்வாக அமையவுள்ள, அனைவராலும் கொண்டாடப்படும் ஒரு நிகழ்வாக இது அமையவுள்ளதோடு, ஒரு கற்றல் அனுபவத்தையும் வழங்கும்.

இந்த கண்கவர் ஒன்றுகூடலானது, ஒரே இடத்தில் ஆசிய யானைகள் அதிக அளவில் ஒன்று சேரும் இடமாக கருதப்படும், மின்னேரியா தேசிய பூங்காவில் இடம்பெறவுள்ளது.

மின்னேரியா குளமானது வறட்சியான காலங்களில் 300 இற்கும் மேற்பட்ட யானைகளை பராமரிக்கிறது.

மின்னேரியா தேசிய பூங்காவிற்கு அருகாமையில் அமைந்துள்ள Cinnamon Habarana Lodge மற்றும் Habarana Village by Cinnamon (ஒன்று சேர்த்து Cinnamon Habarana Complex என அழைக்கப்படுகிறது) இந்த பிரமிக்க வைக்கும் நிகழ்வைக் காண, விருந்தினர்களுக்கு ஒப்பற்ற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# EVPRO கையுறை அறிமுகம்

ஹேலிஸ் குழுமத்தின் உறுப்பினரும், நிலையான தரமான, உயர் மதிப்பு கொண்ட கையுறை உற்பத்தியில் உலகளாவிய முன்னோடியுமான Dipped Products PLC (DPL), மின்சார வாகன (EV) தொழில் நிபுணர்களின் தனித்துவமான கை பாதுகாப்பு தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் குறிப்பாக வடிவமைக்கப்பட்ட முதல் தயாரிப்பான நுரீசுமு கையுறையை அறிமுகப்படுத்தியது.

மின்சார பொறியியலாளர்களுக்கு இணையற்ற பாதுகாப்பையும், இயக்க சுதந்திரத்தையும் வழங்கும் வகையில், மின்சார வாகனங்களை கையாளுதல் மற்றும் பராமரிப்பு செய்யும் போது மின்சார அதிர்ச்சியிலிருந்து முக்கியமான பாதுகாப்பை வழங்கும் வகையில் EVPRO கையுறை வடிவமைக்கப்பட்டுள்ளது.

"ஹேலிஸ் குழுமத்தின் சமூக நோக்கத்துடன் இணைந்து, உலகம் மற்றும் செழிப்பான பூமியை ஊக்குவிப்பதோடு, நிலையான தனித்துவமான கண்டுபிடிப்புகளுக்கான எங்கள் உள் திறன்களை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், பசுமை புரட்சியை விரைவுபடுத்துவதற்காக முக்கியமான சுற்றுச்சூழல் நட்பு தொழில்களுடன் இணைவதற்கும் நாங்கள் முயற்சித்துள்ளோம்.

மின்சார வாகன சந்தை என்பது அத்தகைய முன்னுரிமை வாய்ந்த தொழில் துறையாகும், 2023 ஆம் ஆண்டில் உலகளவில் மின்சார வாகன விற்பனை 31மூ உயர்ந்து 13 மில்லியன் அலகுகளாக உள்ளது.

"வேகமாக வளர்ந்து வரும் இந்த துறையின் தனித்துவமான தேவைகளுக்கு ஏற்ப சிறப்பு பாதுகாப்பு கருவிகள் தேவை என்பதை உணர்ந்து, உலகின் முதல் EV கையுறையை உருவாக்க கண்டுபிடிப்பு பயணத்தை நாங்கள் மேற்கொண்டோம். அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள வாடிக்கையாளர்களிடையே ஏற்கனவே ஆர்வம் காட்டப்பட்டுள்ளதால், EVPRO, உலகளவில் விநியோக சேனல்களுக்கு செல்லும் போது, DPL இன் வளர்ச்சி திறன் மற்றும் உலகளாவிய போட்டித்திறனை மேம்படுத்த தயாராக உள்ளது" என்று DPLஇன் முகாமைத்துவப் பணிப்பாளர் புஷ்பிக ஜனதீர தெரிவித்தார்.





# ஒரே நாளில் 37 சுத்திகரிப்பு நிகழ்ச்சிகள்

சம்பத் வங்கிக் குழுமத்தின் முழுமையான துணை நிறுவனமும், இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமுமான சியபத பினான்ஸ் பிஎல்சி, நாடளாவிய ரீதியில் உள்ள கிளை வலையமைப்பின் ஊடாக, சுமுகமான வாடிக்கையாளர் சேவையை வழங்கி இலங்கையர்களின் நம்பிக்கையை வென்றுள்ளது.

அதன் நிலையான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் "சியபதயிலிருந்து பூமிக்கு" என்ற நிகழ்ச்சியின் ஊடாக, ஒரே நாளில், வழிபாட்டுத்தலங்கள், சுற்றுப்புறச்சூழல்கள் மற்றும் நெரிசலான பொது இடங்கள் உட்பட 37 இடங்கள் சமீபத்தில் சுத்தம் செய்யப்பட்டுள்ளன..

2024 ஜூன் 05 அன்று, உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, சியபத பினான்ஸ் பிஎல்சி கிட்டத்தட்ட 2 டன் மக்காத குப்பைகளைச் சேகரித்து, சுத்தம் செய்வதற்கும் மீள்சுழற்சி செய்வதற்கும் அனுப்பியது. சகல சியபத பினான்ஸ் ஊழியர்களும் குழுவாக இணைந்து தலைமைத்துவத் திறனுடன், நாடு தழுவிய ரீதியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டு, தமது நிறுவனத்தின் சேவைப் பொறுப்புகளை சரியாக நிறைவேற்றினர்.

அதே வேளையில் சமூகத்திற்காக தமது கடமைகளை செய்வதில் அவர்கள் தமது நேரத்தையும் உழைப்பையும் அர்ப்பணித்தமை தெளிவாக வெளிப்பட்டது.

இந்த நாடு தழுவிய துப்புரவுப் பணிகளுக்கு மேலதிகமாக, சியபத பினான்ஸ் பிஎல்சியின் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பணியாளர்கள், சிவனொலிபாதமலையைச் சுற்றியுள்ள பகுதியில் சூழலை தூய்மைப்படுத்தும் திட்டத்தையும் சமீபத்தில் செயல்படுத்தினர்.



# சிவனொளிபாத மலையைப் பாதுகாக்க சியபத பினான்ஸின் "முயற்சி

சிவனொளிபாத மலையைப் பாதுகாக்க முன்னணி நிதி நிறுவனமான சியபத பினான்ஸ் பிஎல்சி, "சியபதயிலிருந்து பூமிக்கு" என்ற திட்டத்தின் மூலம், "நெமதுமென் பசு அமதும" (வழிபாட்டின் பின் தூய்மைப்படுத்தல்) என்ற கருப்பொருளின் கீழ், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்தி அதன் கூட்டுறவு சமூகப் பொறுப்பு (ஊளுசு) நிகழ்ச்சியாக, சூழலையும் வனவிலங்கு சரணாலயத்தையும், வரும் தலைமுறைகளுக்காக பாதுகாப்பதற்கான அதன் முயற்சியின் முதல் படியைத் தொடங்கியுள்ளது.

இலங்கையில் மிகவும் புகழ்பெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்றாகப் போற்றப்படும் சிவனொளிபாத மலையானது, சிறிபாத, ஆதாமின் சிகரம் அல்லது சமனல கந்த என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

அது சிவபெருமான் அல்லது புத்தர் அல்லது ஆதாமின் புனிதத் தடம் இருப்பதாக நம்பப்படும் புராதன, புனிதத் தலமாகும். ஒவ்வொரு ஆண்டும், உலகம் முழுவதிலுமிருந்து பல்வேறு நம்பிக்கைகள் மற்றும் கலாச்சாரங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் அங்கு வருகை தருகின்றனர்.

# உடன் சரும பராமரிப்பு தீர்வுகள் அறிமுகம்




உலகளவில் முன்னணி சுகாதார வர்த்தக நாமமான னுநவவழட, இலங்கை சந்தையில் தனது சமீபத்திய சருமப் பராமரிப்பு சவர்க்காரத்தை பிரமாண்டமாக அறிமுகப்படுத்தியது.

"டெட்டால் பியூட்டி பிங்க் நைட்" என்று பெயரிடப்பட்ட இந்த வெளியீட்டு நிகழ்வு, இலங்கையின் முதல் இன்ஃப்ளுாயன்ஸர் ராம்ப் வோக் நடைபெற்ற கவர்ச்சியான நிகழ்வாக இருந்தது.

இந்த சந்தர்ப்பம் நாட்டின் மிகவும் பிரியமான மற்றும் செல்வாக்கு மிக்க பெண் சமூக ஊடகப் பிரமுகர்களான ரோஷான் டயஸ் உட்பட சிலரை ஈர்த்தது.

இலங்கையின் பேஷன், மாடலிங், மற்றும் பிரபல அழகுக்கலை நிபுணரும் தொழில்முனைவோருமான ஹாசினி குணசேகர ஆகியோரின் இந்த நிகழ்வானது வண்ணமயமானதாக, கண்ணுக்குக் கவர்ச்சியானதாக இருந்தது மட்டுமன்றி, சிறந்த சருமப் பராமரிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, ஆரோக்கியமான சருமத்தை அடைவதையும் அதனைப் பராமரிப்பதையும் பார்வையாளர்கள் எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும் நிகழ்வாகவும் அமைந்தது.